1967 ஜூலை 12]

THIRU M. WILLIAM : May I know whether any such centre will be opened at Madruai ?

THE HON. THIRU S. J. SADIQ PADSHA : There is no such proposal.

Handloom industry in Tiruttani

*293 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) whether it is a fact that there is a big slump in handloom goods trade in Tiruttani taluk, Chingleput district ;

(*b*) if so, the steps proposed to be taken to improve the pitiable plight of the handloom weavers in that area ; and

(c) whether there is any propasal to improve the handloom goods trade ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

(உ) கைத்தறித் தொழில் மேம்பாட்டுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்களைத் தவிர, தேவையான இடங்களின் தேவைக்கேற்ற துயர்தணிப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகமும், இந்தியக் கைப்பணிகள்-கைத்தறிகள் ஏற்றுமதிக் கார்ப்பிரேஷனும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that, when the Hon. Minister for Education visited those areas, he found there a lot of people without the usual work of weaving because of the glut in that trade and what steps are being taken by the Government to give them alternative employment ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருத்தணி தாலூகாவைப் பொறுத்தவரையில், கைத்தறித் துணித்தேக்கத்தினால், நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கக் கூடும். பொதுவாக எப்போதும் இருந்து வருகிற நிலைமை இருக்கலாமே தவிர புதிதாக எதுவும் ஏற்படவில்லை. அங்கு 12 ஆயிரம் கைத்தறிகள் இருக்கின்றன. ஆயிரம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையின்கீழ் இருக்கின்றன. சென்ற ஆண்டு 11 லட்ச ரூபாய் மதிப்புள்ள துணி உற்பத்தியானது. சென்ற ஆண்டின் விற்பனை 12 லட்சத்திற்கு ஆகியிருக்கிறது. திருத்தணி தாலூகாவைப் பொறுத்தமட்டில் அங்கு உற்பத்தியாகும் துணிகள் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு உகந்ததாகவும், உள்நாட்டு மார்க்கெட்டுக்கு உகந்ததாகவும் இருக்கிறது, மெட்ராஸ் லுங்கி, மெட்ராஸ் ஹேண்ட் கர்ச்சிப், பாக்கெட் ஹேண்ட் கர்ச்சிப் போன்றவைகள் எல்லாம் கணிசமான அளவுக்கு விற்பனையாகியுள்ளன. நிலைமை மோசமாக இல்லை. பொதுவாக கைத்தறித் துறையில் ஏற்பட்டிருக்கிற மந்த நிலைமை திருத்தணி தாலூகாவில் இருக்கலாமே தவிர, வேறு நிலைமை இல்லை.

சிதம்பரம் வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை

*294 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூக்காவில், கருப்பூர், ஒட்டரைப்பாளையம், முள்ளங்குடி, பருத்திக்குடி, வெள்ளூர் முதலிய பல கிராமங்களில் உள்ள மூங்கில் மரங்களை உபயோகப்படுத்தும் வகையில் அப்பகுதியில் பேப்பர் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசாங்கத்தில் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.